# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.596/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்லக்கண்ணு | த-பெ | தங்கவேலு |
| ஊர்: | : | பள்ளத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 46/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2025

**1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பள்ளத்தூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2016 ம் வருடம் ஒரு நாள் நானும் எனது நண்பர் சோலைமுத்து என்பவருடன் புதுவயலுக்கு இருசக்கர வாகனத்தில் ஒரு வேலை விசயமாக சென்று கொண்டிருந்தோம். மதியம் 3.15 மணியளவில் வேலையை முடித்து விட்டு வந்து கொண்டிருந்தபோது அழகாபுரி அழகுநாச்சியம்மன் கோவில் அருகில் வந்து கொண்டிருந்தபோது காவல் அலுவலர்கள் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது எங்களை நிறுத்தி போலீசார் விசாரணை செய்தார்கள். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. அது குறித்து கேட்டதற்கு காவல் துறையினர் இரண்டு முதல் மூன்று நபர்களை பிடித்து விசாரணைசெய்து கொண்டிருந்தார்கள். இன்னார்கள் தான் செயின் பறித்து சென்றார்கள் ஆகையால் சாட்சி கையொப்பம் செய்யுங்கள் என்று போலீசார் சொன்னார்கள். நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 6** . பின்னர் கலைப்புலி என்ற ஊருக்கு போலீசார் எங்களை அழைத்து சென்றார்கள். எதிரிகள் வீட்டின் அருகில் இருந்த மரத்தின் அடியில் இருந்து நகைகள் என்று சொன்னார்கள் 7 பவுன் நகைகளை போலீசார் கைப்பற்றினார்கள். அதை எடுத்தற்கான ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பங்கள் செய்தேன். இந்த **கையொப்பங்கள் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ 8.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

நாங்கள் வந்த சாலை கிழக்கு மேற்கு சாலை. போலீசார் எங்களை அழகுநாச்சியம்மன்

கோவிலுக்கு நேர் எதிரில் விசாரணை செய்தார்கள். அழகுநாச்சியம்மன் கோவிலின் எதிரில் வேறு என்ன உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எங்களுடன் அங்கு சுமார் 7,8 நபர்கள் இருந்தார்கள். என்ன என்ன ஆவணங்களில் கையொப்பம் கேட்டு பெற்றார்கள் என்றால் ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. கலைப்புலி நான் நின்ற இடத்தில் இருந்து எத்தனை தூரம் இருக்கும் என்றால் தூரம் எனக்கு தெரியாது. அமரவதிபுதூர் சென்று கல்லல் செல்லவேண்டும். நாங்கள் சென்ற வீட்டின் கதவு எந்த திசையில் இருக்கும் என்றால் எங்களை வீட்டிற்கு சற்று முன்பாகவே நிறுத்திவிட்டு போலீசார் மட்டும் அங்கு சென்று வந்தார்கள். ஆகையால் வீட்டை சுற்றி என்ன இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நகைகளை எடுத்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றால் எங்களிடம் காண்பிக்கவில்லை. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் அனைத்தும் போலீசார் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 14:58:33 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி